Registered as a Newspaper

வட இலங்கையின்
ஒரே ஒரு விளம்பர
முகவர்கள்
ஜோ. எகட்டன்
செனித் மார்கட்டிங்
அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்
மே/பா. யாழ் பிச இன்ஸ்
139, கடற்கரை வீதி
யாழ்ப்பாணம்.
புதுமையின் உறைவிடம் செனித்

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

வட இலங்கையின்
ஒரே ஒரு விளம்பர
முகவர்கள்
ஜோ. எகட்டன்
செனித் மார்கட்டிங்
அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்
மே/பா. யாழ் பிச இன்ஸ்
139 கடற்கரை வீதி
யாழ்ப்பாணம்.
புதுமையின் உறைவிடம் செனித்.

ஏடு: 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆவணி மீ 23 உ. திங்கட்கிழமை ஹிஜ்ரி 1406 முஹர்ரம் பிறை 3 (08-09-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY இதழ்: 249

# ஷெல் குண்டுகளால் நேற்று யாழ் நகர் அதிர்ந்தது

## போராளிகளின் ஐந்து முனை தாக்குதலில் படையினர் 2 பேர் பலி

யாழ்ப்பாணம், செப்.8

யாழ் நகர் நேற்று ஷெல் குண்டுகளினால் அதிர்ந்தது. போராளிகளுக்கும் சிப்பாய்களுக்கும் இடையில் சனிக்கிழமை இரவு ஆரம்பமான ஷெல் சமர் நேற்றுஇரவு வரை நீடித்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள், ஈ பி ஆர் எல் எப், புளொட், தமிழ் ஈழ ராணுவம் ஈரோஸ் ஆகிய ஐந்து போராளிகள் அமைப்புக்களும் சிப்பாய்களுக்கு எதிராக நேற்றைய ஷெல் சமரில் ஈடுபட்டிருந்தன.

கோட்டையை நோக்கி போராளிகளின் ஷெல்களும் நகரை நோக்கி சிப்பாய்களின் ஷெல்களும் ஏவப்பட்டன.

சிப்பாய்களின் ஷெல்கள் வெடிக்க இருப்பதை முன் எச்சரிக்கை செய்யும் போராளிகளின் சைறன் சத்தங்களும் ஷெல் குண்டு வெடிப்புச் சத்தங்களும் நேற்று முழுவதும் யாழ் நகரைக் கலக்கி அடித்தன.

போராளிகளால் ஏவப்பட்ட ஷெல் தாக்குதல்களின்போது கோட்டைக்குள் இருந்த சிப்பாய் ஒருவரும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் கொல்லப்பட்டனர். பல சிப்பாய்கள் காயம் அடைந்தனர் என்று தெரிகிறது.

சிப்பாய்கள் நகரின் பல பகுதிகளையும் நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தியபோது யாழ் கஸ்தூரியார்வீதிக்கு அருகில் முதியவர் ஒருவர் கொல்லப்பட்டார். பொதுமக்களில் 15க்கு மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

ராணி படமாளிகை, யாழ் மத்திய கல்லூரி, கைத்தொழிலாளர் சங்கக் கட்டடம், நவீன சந்தை, பெரிய தபாற் கந்தோர் ஆகியவை கோட்டையிலிருந்துஏவப்பட்ட ஷெல் தாக்குதல்களினால் சேதம் அடைந்தன.

கொட்டடிச் சந்தியில் உள்ள எவர்விஷன், மின்சாரநிலைய வீதியில் உள்ள கடைகள், வெற்றிலைக்கடை, வாழைப்பழக்கடை, மலர்கடை, முஸ்லிமது அலி அப்துல் அலி ஆகியவையும் சேதமடைந்தன.

கொட்டடியில் சதிரசபிள்ளை என்பவரது வீட்டிலும் ஷெல் விழுந்து வெடித்தது.

நேற்றைய தாக்குதலில் யாழ் மத்திய கல்லூரி ஆய்வு கூடமும் சேதம்அடைந்தது

போராளிகளின் ஷெல் தாக்குதல் காரணமாக கோட்டைக்குள் இறந்த பொலிஸ் கான்ஸ்டபிள் பியதாச என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 35 வயதான இவர் நீண்டகால விடுமுறையில் இன்று கொழும்பு செல்ல இருந்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### மக்கள் இடம் பெயர்வு

யாழ்ப்பாணம், செப் 8

யாழ் மத்திய கல்லூரிக்குப் பின் பகுதியிலுள்ள பெரும்பாலான குடும்பங்கள் ஷெல் தாக்குதல்களுக்கு அஞ்சி இடம் பெயர்ந்துள்ளன.

இதனால் முதலாம் குறுக்குத் தெருவில் உள்ள பல வீடுகள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

நேற்றைய ஷெல் தாக்குதல்களினால் இந்த வீதியில் உள்ள வீடு ஒன்றும் சேதமடைந்தது (உ-10)

## ஷெல்வெடிக்க முன் சைறன் ஒலி!

### மக்களைப் பாதுகாத்த முன்னெச்சரிக்கை

யாழ்ப்பாணம், செப். 8

'புளொட்' இயக்கத்தினரால் மண் மூடைகளைக் கொண்டு அமைக்கப்பட்ட பாதுகாப்பு அரண்களுக்குள் ஏராளமான பொதுமக்கள் நேற்று தஞ்சம்புகுந்து ஷெல் தாக்குதல்களில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொண்டனர்.

கோட்டையில் இருந்து "ஷெல்" ஏவப்பட்ட பல சந்தர்ப்பங்களில் 'புளொட்' போராளிகளினால் முன்னெச்சரிக்கையாக "சைறன்" ஒலிக்கப்பட்டது.

'சைறன்' சத்தம் ஒலித்த சந்தர்ப்பங்களில் மக்கள் நவீனசந்தை, ஆஸ்பத்திரி ஆகியவற்றிற்கு அருகாமையில் அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு அரண்களுக்குள்ளும் வேறு வேறு பாதுகாப்பான இடங்களிலும் ஒதுங்கிக் கொண்டனர்

இதனால் வீண் உயிரிழப்புக்களும், காயங்களும் பெருமளவு தவிர்க்கப்பட்டன

முன்னெச்சரிக்கையாக "சைறன்" ஒலிக்கப்பட்ட சில விநாடிகளையடுத்து "ஷெல்" கண்டுகள் நகரில் விழுந்து வெடித்ததையும் நேற்றும் பலதடவைகள் அவதானிக்கக் கூடியதாக இருந்தது (உ-10)

### 111 முகாம்களில் ஆயுதப்படையினர்

கொழும்பு, செப் 8

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 111 முகாம்களில் இருந்து ஆயுதப் படையினர் இயங்குகின்றனர்.

1985 ஜூலை வரை இம்மாகாணங்களில் 66 முகாம்கள்தான் இருந்தன.

ஜூலையின் பின்னர் 45 புதிய முகாம்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் திறக்கப்பட்டன (உ-ஐ-ஏ)

## ஆஸ்பத்திரிவளவினுள் குண்டுச் சிதறல்கள்

### பொதுமக்கள் உயிர்தப்பினர்

யாழ்ப்பாணம், செப். 8

நேற்று கோட்டையிலிருந்து நடத்தப்பட்ட தாக்குதல்களின் போது யாழ்-ஆஸ்பத்திரி வளவினுள்ளும் ஷெல் குண்டின் சிதறல்கள் விழுந்தன.

எனினும் அவ்வேளையில் அங்கிருந்த பொதுமக்களும், ஊழியர்களும் மயிரிழையில் உயிர்தப்பினர்.

ஆஸ்பத்திரி விடுதிக்கு அருகே உள்ள வளவு ஒன்றினுள் விழுந்து வெடித்த ஷெல் குண்டின் சிதறல்களே யாழ்-ஆஸ்பத்திரி வெளி நோயாளர் பகுதி முன்பாக விழுந்தன.

சுமார் அரை கிலோ எடையுள்ள இந்த ஷெல் குண்டுச் சிதறல்கள் பின்னர் போராளிகளினால் எடுத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-10)



முச்சந்தி முனி

'சைறன்' சத்தம் 'ஷெல்' தாக்குதலில் இருந்து ஓரளவுக்காவது சனத்தைக் காப்பாற்றுதுதான் ஆனால் சில மினிவான் காரருமெல்லே 'சைறன்' மாதிரி ஹோர்ண் அடிக்கினம்...!

## ஷெல் தாக்குதலில் காயமடைந்தோர்

யாழ்ப்பாணம், செப். 8

நேற்றைய 'ஷெல்' தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்தோர் விவரம் வருமாறு:-

1. என். பாலசுப்பிரமணியம் (வயது 22) யாழ்ப்பாணம்.
2. பி பவா (17) மானிப்பாய்.
3. ஏ. தர்மராஜா (37) யாழ்ப்பாணம்.
4. வ. க ... (17) யாழ்ப்பாணம்.
5. டேவிற் மாத்தையா (18) சன்னும்.
6. சோ. ஞானசேகரன் (37) கொட்டடி.
7. எஸ். சிவலிங்கம் (22) மானிப்பாய்.
8. அடைக்கல மோகனதாஸ் (32) ஆனைக்கோட்டை
9. தவசமணி யாழ்ப்பாணம்.
10. எம்.எச். ரகுல்கான் (16) பாஷ்ஷாக் ரோட்.
11. எம். பாலசுப்பிரமணியம் (24) யாழ்ப்பாணம்.
12. ஏ. சாமிநாதன் (36) கவன்கோவிலடி.

(உ-10)

## இலங்கை அரசுக்கு அரசியல் துணிச்சல் வேண்டும்

### ராஜீவ் கூறுகிறார்

ஹராரே, செப். 7

முதலாம் கட்டப் பேச்சுக்களின் போது இணக்கம் காணப்பட்ட விஷயங்களை இரண்டாம் கட்டப் பேச்சுக்களின் போது இலங்கை அரசு வாபஸ் வாங்கிக் கொண்டு விட்டது.

இலங்கை அரசுக்கு அரசியல் துணிச்சல் அவசியம் தேவை.

இப்படி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, ஹராரேயில் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் சொன்னார்.

திரு. காந்தியின் பேட்டி விவரங்கள் நேற்றைய சஞ்சிகையில் வெளியானது தெரிந்ததே (உ-ஐ-ஏ)

## மத்திய கல்லூரி ஆய்வு கூடம் சேதம்

யாழ்ப்பாணம், செப்.8

நேற்றுக் கோட்டை முகாமிலிருந்து நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களினால் யாழ். மத்திய கல்லூரியின் விஞ்ஞான ஆய்வுகூடம் பலத்த சேதமடைந்தது.

பிற்பகல் நான்கு மணியளவில் கோட்டையில் இருந்து ஏவப்பட்ட 'ஷெல்' குண்டு ஒன்று ஆய்வு கூடத்தின் கூரையையும் பிய்த்துக் கொண்டு உட்புகுந்து வெடித்தது.

இதனால் ஆய்வு கூடத்தில் இருந்த அலுமாரிகள், இரசாயனப் பொருள்கள், பரிசோதனைக்குழாய்கள், விஞ்ஞான உபகரணங்கள் அனைத்தும் உடைந்து நொருங்கின.

இரண்டுமாடிக் கட்டடம் கொண்ட இந்த ஆய்வு கூடத்தின் நடுவில் கண்ட "கொங்கிறீட்" தளம்கூட ஷெல் குண்டினால் வெடித்திருக்கிறது. (உ-10)

### இந்திய அமைச்சர் குழு ஆராயும்

திருச்சி, செப். 7

அரசு—கூட்டணிப் பேச்சுக்களின் பெறுபேறுகள் இந்திய அரசுக்கு கிடைத்து விட்டன. அமைச்சர் குழு ஒன்று விரைவில் அவற்றைப் பரிசீலனை செய்யும்.

—இப்படி இணை அமைச்சர் பா. சிதம்பரம் திருச்சியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (உ-ஏ)

### சுபநேரம்

8—09—1986
திங்கட்கிழமை

சுபநேரம்!
12 04 முதல் 01 34 வரை
ராகுகாலம்!
7 34 முதல் 9 04 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## ராஜீவின் நிலையால் இலங்கை அதிர்ச்சி

கொழும்பு, செப் 8

பிரதமர் ராஜீவ் காந்தி ஹராரே செய்தியாளர் மாநாட்டில் பேசிய தொனி குறித்து இலங்கை அரசு வட்டாரங்கள் அதிர்ச்சி அடைந்துள்ளன.

பிரதமர் பிரேமதாஸ, ராஜீவ் காந்தியுடன் நடத்திய பேச்சுக்கள் பற்றிய விவரங்கள் உத்தியோகபூர்வமாகப் பத்திரிகைகளுக்கு வெளியிட்ட செயலைத் திரு. காந்தி கண்டித்து இருந்தார் அல்லவா?

இந்தச் செயல், அரச வட்டாரங்களில் ஒரு சாரார் மத்தியில் பலத்த அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

இனப்பிரச்சினைப் பேச்சுக்கள் குறித்து 'மௌன நிலை' கடைப்பிடித்து வந்த பிரதமர் பிரேமதாஸவின் இந்த நடவடிக்கையை அரசு வட்டாரங்களில் ஒரு பிரிவினர் சந்தேகக் கண்கொண்டு ஆராய்ந்து வருகின்றனர்.

இப்படி கொழும்பு அரசியல் வட்டாரங்கள் சில நேற்றுக் கருத்து வெளியிட்டன.

பிரதமர் ராஜீவ் காந்தி செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்ட கருத்துக்கள் குறித்து கொழும்புச் செய்தியாளர்கள் சில அமைச்சர்களுடன் தொடர்பு கொண்டனர். அவர்கள் பதில் கூறமறுத்து விட்டனர். மௌனஞ் சாதித்தனர்.

நாளை மறுநாள் கூட

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அணிசேரா மாநாட்டில் இலங்கையின் பிரேரணை 'அவுட்'

ஹராரே, செப் 7

எல்லா பிரிவினைவாத பிரகடனங்களையும் அணிசேரா இயக்க நாடுகள் கண்டிக்க வேண்டும் என்று இலங்கை அரசு, அணிசேரா இயக்கமாநாட்டில் கொண்டு வந்த பிரேரணை இறுதியில் கைவிடப்பட்டது

இலங்கையில் தமிழர்களின் பிரிவினைவாதக் கோரிக்கைகளை கண்டிக்கும் வகையில் இந்தப் பிரேரணை அமைந்து இருந்தது.

இலங்கை இனப் பிரச்சினைத் தீர்வுக்கு சர்வதேச முயற்சி எதுவும் தேவை இல்லை என்று இந்தியா பதிலளித்தது.

இந்தியாவின் நிலையை உபகண்டத்தில் உள்ள பெரும்பாலான நாடுகள் ஆதரித்தன.

இதைத் தொடர்ந்து இலங்கை தனது பிரேரணையை வலியுறுத்தாமல் கைவிட்டது. (உ-ஐ-ஏ)

# பருத்தித்துறையிலும் ஷெல் தாக்குதல்கள்

## 6 மாணவிகளும், சிறுமியும் காயம்

பருத்தித்துறை, செப் 8

பருத்தித்துறை இராணுவ பொலிஸ் கூட்டு முகாமிலிருந்து நேற்றுப் பிற்பகல் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களினால் சிறுமி ஒருவர், ஆறு மாணவிகள் உட்பட எட்டுப் பேர் காயமடைந்தனர்.

நேற்று நண்பகல் சிப்பாய்கள் முகாமைவிட்டு வெளியேவர முயற்சித்ததாகவும்—

அதனையடுத்து போராளிகள் தாக்குதல்களைத் தொடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் முகாமுக்குத் திரும்பிச் சென்ற சிப்பாய்கள் அங்கிருந்து ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

பருத்தித்துறையில் உள்ள தனியார் கல்வி நிலையம் ஒன்றிற்கு கல்வி கற்கச் சென்ற நான்கு மாணவிகள் வழியில் ஷெல் குண்டினால் காயமடைந்தனர்

வி. ரஞ்சனி (வயது17), எஸ். சித்திரச்செல்வி, (வயது16), ஆர் வனிதா தேவி (வயது 18), எஸ் கிருபா (வயது 17) ஆகியோரே காயமடைந்தனர். இவர்கள் நால்வரும் புற்றளைப் சேர்ந்தவர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### முகாம்கள் மீது போராளிகள் தாக்குதல்

யாழ்ப்பாணம், செப் 8

ஒட்டுசுட்டான், ஓமந்தை இராணுவ முகாம்கள்மீது போராளிகள் தாக்குதல் நடத்தியதாகத் தெரியவருகிறது

இந் தாக்குதல்களின் போது ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கப்பட்ட செய்திகள் ஏதும் இல்லை.

ஒட்டுசுட்டான் முகாம் மீதான தாக்குதல் சனிக்கிழமை நடந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

## பூஸா கைதிகளுக்கு ஆதரவாக வெலிக்கடையில் நேற்று உண்ணாவிரதம்

கொழும்பு, செப் 8

பூஸாவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 2 ஆயிரத்து 500 தமிழ் கைதிகளின் ஆறு அம்சக் கோரிக்கைக்கு ஆதரவாக வெலிக்கடையில் நேற்று ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

வெலிக்கடையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகளே அடையாள உண்ணாவிரதத்தில் நேற்று ஈடுபட்டனர்.

பூஸாவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளின் 6 அம்சக் கோரிக்கை வருமாறு:

* நிரபராதிகள் அனைவரும் உடன் விடுவிக்கப்படவேண்டும்.
* 18 மாதத்திற்கு மேல் தடுத்து வைக்கப்பட்டிருப்போர் நீதிமன்றத்தில் உடனடியாக ஆஜர் செய்யப்படவேண்டும்.
* தடுத்து வைக்கப்பட்டிருப்போர் சித்திரவதைக்கோ; இழிவு

(4 ஆம் பக்கம் பார்க்க)

### காவல் அரண் சேதம்

யாழ்ப்பாணம், செப் 8

முல்லைத்தீவு இராணுவ முகாமுக்கு பாதுகாப்பாக பஸ் டிப்போவில் அமைக்கப்பட்ட காவல் அரண் தாம் நடத்திய தாக்குதலினால் முற்றாகச் சேதமடைந்ததாக விடுதலைப் புலிகள் நேற்று அறிவித்தனர் (உ)

### ஜீ. சி. ஈ. பாடங்கள் குறையும்

கொழும்பு, செப். 8

ஜீ சி ஈ சாதாரண பரீட்சைபரீ சார்த்திகள் தோற்ற வேண்டிய பாடங்களின் எண்ணிக்கை குறைக்கப்படலாம். இது சம்பந்தமான திட்டம் ஒன்று பரிசீலனையில் இருக்கின்றது.

—இப்படிக் கல்வி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

ஜீ சி ஈ (சாதாரண) தரம் ஜி. சி. ஈ (உயர்தரம்) ஆகிய பரீட்சைகளில் தேசியத் தன்மை தொடர்ந்து பாதுகாக்கப்படும் என்றும்—

இப்பரீட்சைகள் மாகாணசபை மட்டத்தில் நடைபெறுத என்றும் அவர் சொன்னார் (உ-ஏ)

## இலங்கை அறிக்கை; கூட்டணி ஆராயும்

சென்னை, செப். 7

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்கள் குறித்து இலங்கை அரசு அனுப்பிய அறிக்கையை தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் குழு வெள்ளிக்கிழமையன்று கூடி பரிசீலனை செய்யும்

கடந்த சனிக்கிழமை கூடிய அரசியல் குழுக் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இலங்கை அரசின் அறிக்கையின் முதலாவது பகுதியே கிடைத்துள்ளது. இரண்டாவது பகுதி கிடைத்தபின்னர் தான் பூரணமாக ஆராய்வது என்று கூட்டம் முடிவில் தீர்மானிக்கப்பட்டது. (உ-ஏ)

### 3 ஆம் கட்டப் பேச்சுக்கு முன்னர்

## மீண்டும் அ.க.மாநாடு நடத்த ஜனாதிபதி முடிவு

கொழும்பு, செப். 8

மூன்றும் கட்டப் பேச்சுக்கள் புதுடில்லியில் ஆரம்பமாகும் முன்னர் அரசியல் கட்சிகள் மாநாட்டை மீண்டும் நடத்த ஜனாதிபதி தீர்மானித்து இருக்கிறார்.

இப்படி கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

புதுடில்லியில் சமர்ப்பிக்கப் போகும் யோசனைகள் பற்றி அரசியல் கட்சிகள் மாநாட்டில் ஜனாதிபதி விளக்கமளிப்பார் என்றுதெரிகிறது. (உ-ஏ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

ஆண்டவன் செயல், கர்ம பலன் என்று ஒதுங்கி இராமல் முயற்சியை முக்கியமாகக் கொண்டு மனிதன் முன்னேற வேண்டும்.

—காஞ்சி முனிவர்.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல. 15 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.    தொலைபேசி 24805, 22073
05-09-86    ஆ.பெ.23

## புதிய பாதை தெரியுது பார்!

சிம்பாப்வேயின் தலைநகர் ஹராரேயில் வைத்து இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி நடத்திய பத்திரிகையாளர் மாநாடு எல்லோரது கவனத்தையும் ஈர்த்திருக்கிறது.

அணிசேரா நாடுகளின் தலைமைப் பதவியை சிம்பாப்வேயிடம் கையளித்து மாநாடும் முடிந்த கையோடு திரு. ராஜீவின் பத்திரிகையாளர் மாநாடு நடந்ததால் அதற்கு ஒரு புறம்பான எடைமானம் உண்டு.

பிரஸ்தாப பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் இலங்கை, பாகிஸ்தான் சம்பந்தப்பட்ட விடயங்கள் குறித்தே நீண்ட நேரம் பதிலளித்திருக்கிறார்.

இலங்கை குறித்து அவர் வெளியிட்ட கருத்துகள் நிச்சயம் இந்த நாட்டு அரசாங்கத்துக்கு அதிருப்தியைக் கொடுத்திருக்கும்.

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் இலங்கை அரசுக்கு அக்கறை இல்லை என்பதை அவர் சரியாகக் கண்டுபிடித்திருக்கிறார். அதனை வெட்ட வெளிச்சமாகக் கூறியும் விட்டார்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியா தெரிவித்த ஆலோசனையை இலங்கை ஜனாதிபதி புதுடில்லியில் வைத்து ஏற்றுக்கொண்டது; பின்னர் இலங்கை வந்ததும் அதனைக் காற்றில் பறக்கவிட்டது ஆகிய சமாச்சாரங்கள் ராஜீவின் நெஞ்சைக் குத்திக்கொண்டிருக்கின்றன. பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு அவர் பதிலளித்த பாங்கு அதனையே பிரதிபலிக்கிறது.

இந்தியாவின் மத்தியஸ்தத்தை இலங்கை விரும்பாவிடின் வெளிப்படையாகச் சொல்ல வேண்டும். அப்படிச் சொன்னால் மத்தியஸ்தர் நிலையிலிருந்து விலகுவதற்கு இந்தியா தயார் என்றும் திரு. காந்தி வெட்டு ஒன்று துண்டு இரண்டாகச் சொல்லியிருக்கிறார்.

இலங்கை அரசின் ஒளித்து விளையாடும் — கண்ணாமூச்சி விளையாட்டை இனியும் பார்த்துக் கொண்டிருக்கத் தயாரில்லை என்ற தொனி அதில் ஒலிக்கிறது அல்லவா?

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் இலங்கை அரசு சொல் ஒன்று செயல் வேறாகவும், காலத்தைக் கடத்துவதற்காக நாடகம் ஆடுவதாகவும் இந்தியா உணர்கிறது என்பதைத் திரு காந்தி தமது பதில்களில் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

எல்லாவற்றுக்கும் மேலாக ஹராரேயில் வைத்து பிரதமர் திரு. பிரேமதாச கையளித்த கோரிக்கையை திரு. ராஜீவ் காந்தி நிராகரித்து விட்டார்!

இனப்பிரச்சினைக்குச் சரியான ஒரு தீர்வை இன்னமும் முன்வைக்காமல், முந்திரிக் கொட்டை மாதிரி இந்தியாவுக்கு நிபந்தனை விதிப்பது போன்ற மூன்றம்சக் கோரிக்கையை முன்வைத்து மூக்குடைபட்டு விட்டார் பிரேமதாச!! 'உள்ளதையும் கெடுத்தான் கொள்ளிக் கண்ணன்' என்ற நிலையாகிவிட்டது!!! மொத்தத்தில் இலங்கை மூக்கறுபட்ட நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது!!!!

இனப் பிரச்சினைக்கு அரசு முன்வைத்த மாகாணசபை யோசனையை இந்தியாவும் ஆதரிக்கிறது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமிழர் பிரச்சினையைத் தீர்த்துவிட வேண்டும் — இவ்வாறு அரச கட்டுப்பாட்டில் உள்ள கொழும்பு ஆங்கிலத் தினசரிகள் உட்பட அரச சார்பு வட்டாரங்கள் ஆவல் கொண்டிருந்தன. முன்னர் இந்தியாவைக் கண்டித்து வந்த அதே வட்டாரங்கள் சமீப நாட்களாக பாராட்டியும் வந்தன.

அந்த ஆவல்களையும், எதிர்பார்ப்புகளையும் சிதறடிக்கும் விதத்தில் ராஜீவின் பத்திரிகையாளர் மாநாட்டுக் கருத்துக்கள் அனல் பறந்திருக்கின்றன.

அணிசேரா இயக்கத் தலைவர் ராஜீவ் என்ற நிலைமாறி இந்திய உபகண்டத்தின் பிரதமர் ராஜீவ் என்ற நிலையில் அவர் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

இலங்கையின் ராஜதந்திரத்தை விஞ்சும் ராஜதந்திரத்தை இந்தியாவால் கைக்கொள்ள முடியும் என்பதற்கு ஒரு சமிக்ஞை விடுத்திருக்கிறார்.

இலங்கைப் பிரச்சினை விவகாரத்தில் செப்டம்பரில் இந்தியாவின் போக்கு வேறு உருவம் எடுக்கும் என அரசியல் அவதானிகள் எப்போதோ எதிர்பார்த்தனர். அந்த மாற்றத்தின் ஆரம்பம் சிம்பாப்வேயில் கேட்டிருக்கிறது.

இனிமேல்தான் இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் உண்மையான — புதிய பாதை தெரியும். அது தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதாக இருந்தால் சரிதான். எமது அக்கறையும் அதுவே.

## 'உமா' மீதான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, செப் 8

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் தலைவர் திரு. உமாமகேஸ்வரன் மீதான வழக்கு ஒன்றின் விசாரணை நவம்பர் 11 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

உமாமகேஸ்வரன் உட்பட 12பேர் மீது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்கு ஒன்று கடந்த புதன்கிழமை கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி எச். டபிள்யூ. சேனநாயக்கா முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

1985 ஜனவரிக்கும் அக்டோபருக்கும் இடையில் வட்டுக்கோட்டை அரச பண்ணையைக் கொள்ளையிட்டது— சிப்பாய் விஜயவீராவைக் கொலை செய்தது ஆகிய குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன.

---

அணிசேரா நாடுகளின் மாநாட்டில் தீர்மானம்

# தென்னாபிரிக்கா மீது கட்டாய பொருளாதாரத் தடை!

## அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகளை வற்புறுத்தவும் முடிவு

ஹராரே, செப்டெம்பர். 7

தென்னாபிரிக்கா மீது கட்டாயப் பொருளாதாரத் தடைவிதிப்பது என அணிசேரா நாடுகளின் உச்சிமாநாட்டின் இறுதி நாளன்று தீர்மானிக்கப்பட்டது.

அமெரிக்கா, பிரிட்டன், மேற்கு ஜேர்மனி, ஜப்பான் போன்ற நாடுகளுக்கு தூதுக்குழுக்களை அனுப்பி தென்னாபிரிக்கா மீது கட்டாய பொருளாதாரத் தடை விதிக்கும்படி அந்த நாடுகளை வற்புறுத்த வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

அணிசேரா நாடுகளின் எட்டாவது மாநாடு ஸிம்பாப்வேயின் ஹராரே நகரில் நடைபெற்று முடிந்தது.

★ அமெரிக்காவும் ரஷ்யாவும் ஒன்றிணைந்து அணு ஆயுதக் குறைப்பு நடவடிக்கைகளில் சுமுகமான தீர்வுக்கு வரவேண்டும்.

★ ஆபிரிக்க முன்னரங்கு நாடுகளுக்கான நிதியம் ஒன்றை ஏற்படுத்த இந்தியா தலைமையிலான குழுவொன்றும் நியமிக்கப்பட்டது.

★ அணிசேரா நாடுகளின் உச்சிமாநாட்டை அடுத்த தடவை எங்கு நடத்தப்பட வேண்டும் என்பதை 1988 ஆம் ஆண்டு வெளியுறவு அமைச்சர்கள் முடிவு செய்வர்.

★ ஈரான், ஈராக் நாடுகள் சமாதான உடன்படிக்கையை ஏற்படுத்த வேண்டும். அதுடன் இந்து மாசமுத்திர பகுதியை அமைதிப் பிராந்தியமாகப் பிரகடனப் படுத்த வேண்டும்

-இவ்வாறான தீர்மானங்கள் அணிசேரா மாநாட்டின் இறுதி நாளன்று நிறைவேற்றப்பட்டன. (ஒ)

### சிரியா குற்றச்சாட்டு

டமாஸ்கஸ் செப் 7

மத்திய கிழக்கு நாடுகளில் சமாதானம் உருவாவதற்கு அமெரிக்காவும் இஸ்ரேலும் பெரும் தடையாக இருந்து வருகின்றன.

இவ்வாறு சிரியா மீண்டும் குற்றம் சாட்டியுள்ளது.

மத்திய கிழக்கில் சமாதானத்தை விரும்புவதாக அமெரிக்காவும் இஸ்ரேலும் அடிக்கடி தெரிவித்து வந்த போதிலும் மத்திய கிழக்கு நாடுகளுக்கிடையே பிரிவையும் ஒற்றுமையின்மையையும் ஏற்படுத்தவே அவை முயற்சி செய்து வருகின்றன. இதனால் மத்திய கிழக்கு நாடுகளில் சமாதானத்துக்குப் பங்கம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு மேலும் சிரியா தெரிவித்தது. (ஒ)

அணு ஆயுதக் குறைப்பு

## அமெரிக்க-ரஷ்ய பேச்சுக்கள் தோல்வி

வாஷிங்டன், செப் 7

அணு ஆயுதக்குறைப்பு ஆயுதக்கட்டுப்பாடு ஆகியவை குறித்து பேச்சுவார்த்தைகள் நடத்த அமெரிக்கா சென்ற ரஷ்ய தூதுக்குழு தனது இரண்டு நாள் பேச்சுவார்த்தையை முடித்துக் கொண்டது.

ஆனால் இவ்விருநாடுகளும் இப்பேச்சுவார்த்தைகளில் எவ்விதமான முன்னேற்றத்தையும் காணவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் இதே மாதிரியான பேச்சுவார்த்தைகள் மாஸ்கோவில் மேற்கொள்ளப்பட்டிருந்த போது அதுவும் தோல்வியைத் தழுவியிருந்தது. (உ-ஒ)

### தீ விபத்தில் 14 பேர் பலி

ஒஸ்லோ செப். 7

தெற்கு நோர்வேயில் 10 மாடிகளையுடைய ஹொட்டலொன்று தீப்பிடித்ததில் 14 பேர் பலியானார்கள் 50 பேர் காயமடைந்தனர்

### படகு அகதிகள் விவகாரம் முடிந்தது என்கிறார் கப்டன்

பொன், செப்.7

கனடாவில் கரையொதுங்கிய 152 தமிழ் அகதிகளை சட்டவிரோதமாக நடுக்கடலில் இறக்கிவிட்டதாகச் சந்தேகிக்கப்படும் கப்பல் கப்டன் வொல்வ்காங் பின்டெல் அந்த விவகாரம் முற்றுப் பெற்றுவிட்டதாக தெரிவித்தார்

இதுவரையில் பொலிஸார் என்னை அணுகவில்லை என்பதிலிருந்து இந்த விடயம் பூரணத்துவமடைந்து விட்டதாக அனுமானிக்க முடிகின்றது.

தமிழ் அகதிகளை ஜேர்மனியிலிருந்து கனடாவிற்கு ஏற்றிச் செல்ல பின்டெல் கப்டனாக இருந்த கப்பலாறு ஓரிகே பயன்பட்டதாக பொலிஸார் இன்னும் ஆராய்வதாக பொலிஸ் தரப்பினர் தெரிவித்தனர்



வளைகுடாப் போர்:

### ஈரான் தாக்குதலில் 70 ஈராக்கியர் பலி?

லண்டன், செப்.7

தெஹ்ரானிலிருந்து வெளியிடப்பட்ட இரானிய அறிக்கைகள் இதனைத் தெரிவித்தன.

இந்தத் தாக்குதல்கள் சம்பந்தமாக பக்தாத்திலிருந்து தகவல் ஏதும் வெளியிடப்படவில்லை.

வளைகுடாப் போரின் தெற்குப் போர்முனையில் ஈரானிய குண்டு வீச்சில் 70 ஈராக்கிய படைவீரர்கள் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. ஈராக்கிய நிலைகளின் மீது ஈரானிய படைகள் நடத்திய தாக்குதலில் பலத்த சேதம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ)

### ஜேர்மனியில் சிகிச்சை

கராச்சி, செப் 7

கராச்சி விமான நிலையத்தில் தீவிரவாதிகளால் கைப்பற்றப்பட்ட விமானத்திலிருந்த காயமுற்ற பயணிகள் மேல் ஜேர்மனிக்கு மருத்துவ சிகிச்சைக்காக எடுத்துச் செல்லப்பட்டனர்.

அமெரிக்க விமானப் படை விமானமொன்று காயமடைந்த அமெரிக்கர்களையும் ஐரோப்பியர்களையும் மேற்கு ஜேர்மனிக்கு எடுத்துச் சென்றது. (உ-ஒ)

### யாஸிர் அரபாத் தலைமைதாங்கினார்

ஹராரே செப். 7

பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாஸிர் அரபாத் அணிசேரா நாடுகளின் தலைமைப்பதவியை ஒரு மணிநேரம் அலங்கரித்தார்.

அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டுத் தலைவர் றொபேர்ட் முகாபே தேனீர் இடைவேளைக்கு சென்ற போதே அரபாத் தலைமை தாங்க அழைக்கப்பட்டார்.

22 உப தலைவர்களில் ஒருவரான அரபாத்தை தலைமை தாங்க முகாபே தெரிவு செய்ததன் நோக்கம் இருவருமே பயங்கரமான வெள்ளை இயக்கங்களுக்கு தலைமை தாங்கிய ஒற்றுமை என்பதாலேயா தெரியவில்லை, என மாநாட்டுப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (ஒ)

---

## சமய நற்செய்திகள்

### கல்வயல் ஆயிலடி வீரகத்திவிநாயகர் திருவிழா ஆரம்பம்

சாவகச்சேரி, செப்.8

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவங்கள் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன.

பத்து நாட்கள் நடைபெறவுள்ள இத்திருவிழாக்கள் இறுதி நாளன்று 108 சங்காபிஷேகத்துடனும் முத்துச் சப்பறத்தில் விநாயகப் பெருமான் வீதிவலம் வருதலுடனும் பூர்த்தியாகும்.

சிவாச்சாரிய திலகம் பிரம்மஸ்ரீ சிதம்பரநாதக்குருக்கள் பிரதம குருவாக இருந்து திருவிழாக்களை நடத்தி வைப்பார். (ஒ-31)

### சாந்தையர் மடம் கற்பக விநாயகர் உற்சவம்

யாழ்ப்பாணம் செப் 8

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய அலங்கார உற்சவங்கள் இன்று ஆரம்பமாகின்றன.

பதினைந்து நாட்கள் இவை நடைபெற்று 22 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவுறும். (ஒ)

### அலங்கார உற்சவம்

வட்டுக்கோட்டை செ. 8

காரைநகர் தங்கோடை நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 1 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இந்த உற்சவ இறுதித் தினமான 10 ஆம் திகதி புதன் கிழமையன்று சங்காபிஷேகமும், விசேட மேளக் கச்சேரிகளும் சமயச் சொற்பொழிவுகளும் நடைபெறவுள்ளன.

### கருணாகர பிள்ளையார் திருவிழா

யாழ்ப்பாணம், செப்.8

உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கொடியேற்ற திருவிழா நாளை நடைபெறும்.

17 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவு பெறும். (உ)

### மகா கும்பாபிஷேகம்

ஜேலனை செப். 8

பல இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெற உள்ளது. இந்த மகா கும்பாபிஷேகத்தில் 46 பிரதிஷ்டா குருமார்கள் கலந்து கொள்ள விருக்கிறார்கள். (உ-167)

### இலட்சார்ச்சனை பூர்த்தி விழா

யாழ்ப்பாணம் செப். 8

சாவகச்சேரி அமிர்தாம்பிகை சமேத சந்திரசேகர வாரிவனநாத சிவன் கோவிலில் கடந்த 30 ஆம் திகதி முதல் இலட்சார்ச்சனை நடைபெற்று இன்று திங்கட்கிழமை 1009 நவோத்திர சங்கிர சங்காபிஷேகம் நடைபெறுகின்றது.

இன்றிரவு இலட்சார்ச்சனை பூர்த்தி விழாவும் திருவீதி உலாக்காட்சியும் நடைபெறும்.

இசை ஈழ நல்லூர் ஸ்ரீ தேவி விக்கினேசர் குழுவினரின் சிறப்பு நிகழ்ச்சியும் இடம்பெற இருக்கிறது. (உ-10)

### சிவானந்தரின் 100 ஆவது ஜெயந்திதினம்

யாழ்ப்பாணம் செப் 8

திருநெல்வேலி ஆடிபாதம் வீதியில் அமைந்துள்ள இராமகிருஷ்ண ஆலயத்தில் இன்று மாலை சுவாமி சிவானந்தரின் 100 ஆவது ஜெயந்தி தின விழா கொண்டாடப்படவுள்ளது.

ஜெயந்தி தின விழாவில் தலைமை வகிக்கும் ஸ்ரீ லஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அருளுரை வழங்குவார். தொடர்ந்து இராமகிருஷ்ண ஆலய மாணவிகளின் பஜனையும் ஆத்ம ஜோதி முத்தையாவின் 'சிவானந்த தேன்' என்ற தலைப்பில் சொற்பொழிவும் இடம்பெறும். (உ)

# இன்பத்தைத் தேடுகிறோம்; துன்பமே கிடைக்கிறது

## நல்லை சொற்பொழிவில் இறுதி நாள் பேச்சு

யாழ்ப்பாணம், செப். 8

நாம் தேடுவது ஒன்று அகப்படுவது வேறு ஒன்று. இது ஏன்? நமது கொள்கையின் அடிப்படையில் ஏதோ கோளாறு இருப்பதுவே காரணம்.

இப்படி ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் நல்லை ஆதீனத்தில் நிகழ்த்தி வந்த தொடர் சொற்பொழிவின் இறுதி நாள் நிகழ்ச்சியில் 'இன்பமே சூழ்க' என்ற தலைப்பில் பேசுகையில் சொன்னார்.

அவர் மேலும் சொன்னதாவது:

உலகில் கவலை இல்லாத மாந்தர் இல்லை. எங்கும் துக்கமே குடி கொண்டிருக்கிறது.

இன்பம் எங்கே இருக்கிறது? அது எப்படி இருக்கும் என்று தேடித் தேடிச் சலிக்கிறார்கள்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று இன்பம் போலத் தோன்றுகிறது. அதனையே பின்பற்றிச் சென்று முடிவில் அது பெருந் துன்பமாய் முடிவதைக் கண்டு இன்னல் உறுகிறார்கள். எது இன்பம் என்பதே நமக்குத் தெரிவதில்லை.

உலகில் இன்பம் முயற்சி கொம்பலை. அது இருக்கத்தான் செய்கிறது. துன்பக் கடலைக் கடந்து அழியாத இன்பக் கரை ஏற வேண்டுமானால் சிவபிரானை இடைவிடாது சிந்தனை செய்யுங்கள். சிவன் என்பதற்கே இன்பத்தைச் செய்பவன் என்று பொருள். அவன் அடியார்க்கு அன்பருளி விடுவான். அதைவிட இன்பம் வேறென்ன இருக்கிறது.

நமது ஆபாசங்கள் நம்மை மயக்கி ஏமாற்றி விடுகின்றன. உலகில் பாசம் மிகப் பொல்லாதது. குற்றம் நிறைந்தது. அதனைக் களைய வேண்டும். அப்போது சிவன் நமக்கு அருள் புரிவான்.

ஈசனே என்று நாவால் ஒலித்தால் இன்பம் கடல் போலப் பொங்கி நம் உள்ளத்தில் ததும்பி நிற்கும்—இப்படி அவர் சொன்னார். (உ-எ)

### பெண்ணின் நேர்மை

உடுவில் செப். 8

கன்னாகம் சுந்தரோடையைச் சேர்ந்த பெண் ஒருவர் கன்னாகம் வங்கியினர் தவறுதலாக வழங்கிய 14,000 ரூபாவுக்கான கொடுப்பனவுக் கட்டளையை மீண்டும் வங்கி அதிகாரிகளிடமே சேர்ப்பித்து வங்கி அதிகாரிகளினால் பாராட்டப்பட்டார். (இ-27)

### மகேஸ்வரபூசை

யாழ்ப்பாணம், செப்.8

கொக்குவில் குளப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ காளி அம்மன் ஆலயத்தில் எழுந்தருளி விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டு நடைபெற்ற பத்து நாள் திருவிழாக்கள் பூர்த்தியை ... மகேஸ்வர பூசை நடைபெறும். (ஒ)

## மாகாண சபையை ஏற்பதால் சமஷ்டி அமைப்பு ஏற்படும்

### சிங்களப் பேராசிரியர் கூறுகிறார்

கொழும்பு, செப் 8

திரேலியாவில் கான்பெராவுக்கும் கொடுக்கப்பட்டது போன்று கொழும்பு மாநகருக்கும் தனி அந்தஸ்து கொடுக்கப்படவுள்ளது.

இது சமஷ்டி அரசமைப்பின் ஓர் அம்சம். ஆகவே மாகாண சபை அமைப்பு முறையை ஏற்றுக் கொள்வது இலங்கையைச் சமஷ்டி அரசமைப்புக் கொண்ட நாடாக மாற்றுது என்று எப்படிக் கூற முடியும்?

—இப்படி பேராசிரியர் டபிள்யூ. ஏ. விஷ்வவர்ணபால கேட்டார்.

மயிலப்பிட்டியா என்ற இடத்தில் நடந்த கூட்டத்தில் பேசுகையில் பேராசிரியர் மேலும் சொன்னதாவது;

சமஷ்டி அரசின் ஓர் அம்சம்தான் நிதி ஆணைக்குழு நியமனம். மாகாண சபைக்கும் மத்திய அரசுக்கும் நிதி ஒதுக்கீடு செய்வதுதான் நிதி ஆணைக்குழுவின் கடமை.

நிதி ஆணைக்குழுவை நியமிக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டு உள்ளது. இதன்மூலம் சமஷ்டி அரசமைப்பைக்கொண்ட இலங்கைதான். உருவாகப் போகிறது.

—இப்படி பேராசிரியர் குறிப்பிட்டார். (உ-எ)

### அமெரிக்காவில் வாஷிங்டனுக்கும் ஆஸ் விசாரணைக்கு மேலும் 4 மனுக்கள்

கொழும்பு, செப். 8

இராணுவப் பயிற்சிக்கு அனுப்பப்படுவதை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்த ரயில்வே பாதுகாப்பு ஊழியர்களின் மனுக்களில் மேலும் நான்கை விசாரணை செய்ய உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

254 ரயில்வே பாதுகாப்பு ஊழியர்கள் இம் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

இம் மனுக்களை உயர் நீதிமன்றம் ஒவ்வொன்றாக ஏற்று விசாரணைக்கு உத்தரவிட்டு வருகிறது (உ-எ)

### நூல் அன்பளிப்பு வைபவம் நாளை

யாழ்ப்பாணம், செப். 8

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்துக்கு நூல்கள் அன்பளிப்புச் செய்யும் வைபவம் நாளை 8 ஆம் திகதி காலை பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

பிரதம கல்வி அதிகாரி திரு. வி. தம்பராசா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

பழைய மாணவர் சங்கத்தின் முயற்சியால் சுமார் பத்தாயிரம் ரூபா பெறுமதியான நூல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-9)

### இடமாற்றம்

வேலணை, செப். 8

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையில் உதவி வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய திரு. எஸ் என். இளையதம்பி காரைநகர் அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டார். இவரது இடத்திற்கு உதவி வைத்திய அதிகாரி திரு. ஏ வீ. மயில்வாகனம் நியமிக்கப்பட்டார். (இ-167)



### பொய்யாமொழி

குறள்:

தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்
அருளாதான் செய்யும் அறம்.

பொருள்:

அருள் மேற்கொள்ளாதவன் செய்கின்ற அறச் செயலை ஆராய்ந்தால், அஃது அறிவு தெளியாதவன் ஒரு நூலின் உண்மைப் பொருளைக் கண்டாற் போன்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

Diploma in Radio and Television Engineering
6 Months – Weekends
THEORY and PRACTICALS
Commencement 14-9-86
Fees Rs 250/- Per Month
Cantabia Institute
21, Main Street, Jaffna.
T'Phone 24201

# உதயன்

08-09-1986 திங்கட்கிழமை

SPOKEN ENGLISH
Weekends Only
Full Course Fees Rs. 100/- Only
வெளிநாடு செல்பவர்களுக்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்
விரிவுரைகள்; பிரபல ஆங்கில விரிவுரையாளர்
கந்தையா நவரேந்திரன்
Cantabia Institute
21, Main Street, Jaffna
T-Phone: 24201

# போராளிகளை நிராயுதபாணியாக்க
## ஜே.ஆர். தந்திரோபாயம்

சென்னை, செப். 7
ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் முக்கிய தந்திரோபாயம் இந்திய நம்பிக்கையை எப்படியாவது பெற்று இந்திய அரசுக்கும் தமிழ்ப் போராளிகளுக்குமிடையே தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்துவது; அதன் மூலம் போராளிகளை நிராயுத பாணியாக்குவது.

இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரன் 'இந்து' இணை ஆசிரியருக்கு அளி

### பிரபா பேட்டி

த்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

தமிழருக்குச் சொற்ப சலுகை வழங்கும் புதிய யோசனைக்கு இந்தியாவின் உதவியை பகிரங்கமாக ஜெயவர்த்தனா கேட்டிருக்கிறார்.

அத்தோடு உள்நாட்டில் போருக்குத் தயாராகிவரும் திரு. ஜெயவர்த்தனா வெளிநாட்டில் சமாதான விரும்பியாகக் காட்டிக்கொள்ள விரும்புகின்றார்.

'இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண என்னால் முடிந்ததைச் செய்துவிட்டேன்; சாத்தியப்படவில்லை. ஆகவே யுத்தத்தை நடத்துகிறேன்'- இப்படி உலகத்துக்குக் காரணம் தெரிவிக்க வேண்டிய நிலையை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார், ஜெயவர்த்தனா.

திடகாத்திரமான மக்களை போருக்கு அழைத்துச் சொல்லுவேன்என்று கூறும் திரு ஜெயவர்த்தனா சமாதான விரும்பியாகத் தன்னைக் காட்ட முடியாது.

சோஷலிச தமிழ் ஈழமே எமது லட்சியம். மக்கள் ஜனநாயக அடிப்படையில் எமது கலாசார பாரம்பரியத்தின் அடிப்படையிலான நாட்டை உருவாக்குவோம்.

இராணுவ தந்திரோபாயம் எமக்கு அத்தியாவசியத் தேவை, இந்திய இராணுவம் இல்லை என்றால் சிறுவின் எல்லை புதுடில்லிவரை வந்திருக்கும்.

—இப்படி திரு. பிரபாகரன் சொன்னார்.

(உ-ஐ-எ)

## உயிர் தப்பிய விதம்
### குறித்து பத்திரிகையாளர் ஒஸ்லோ நகரில் தகவல்

ஒஸ்லோ, செப். 7
மாதகல் கடல் பகுதியில் வைத்து கடற்படையினரால் தாக்கப்பட்ட படகில் இருந்து உயிர் தப்பிய நோர்வே நாட்டு பத்திரிகையாளர், ஒஸ்லோ நகரில் வைத்து தாம் தப்பிய விதம் குறித்து தகவல் வெளியிட்டார்.

சேதப்படுத்தப்பட்ட படகில் இருந்த மூன்று போராளிகளுடன் உயிர் தப்பி இந்தியக் கரையை அடைந்ததாகவும்—

இந்தியக் கரைக்கு நீந்திச் செல்ல 90 நிமிடங்கள் எடுத்தன என்றும் ஜோகன் ரப்ஸ் என்ற நோர்வே பத்திரிகையாளர், ஒஸ்லோவில் இருந்து வெளிவரும் மாலை பத்திரிகையொன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

(உ-ஐ-எ)

## பயன் தருமபனை வளம் பற்றி பயிற்சி அவசியம்

யாழ்ப்பாணம், செப். 8
தானே வளர்ந்து தானே பயன்தரும் பனையை நாம் வளர்த்து பயன் அடைவோம். எமது வருங்கால சந்ததிக்கு பனையின் மகிமை பற்றி பயிற்சியளிப்போம்.

—இவ்வாறு யாழ் அரசாங்க அதிபர் திரு. வ. சிவகுருநாதன்... நிதி வ. இயோசப்பிள்ளை அண்டகை கூறினார்.

பனை அபிவிருத்திச் சபையின் ஆதரவுடன் 'யாழ் பீச் இன்' ஆசுரியல் ஜோர் எட்டன் நடத்திய பனம் பொருள் உணவு அறிமுக விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு கூறினார்.

இவ்விழாவிற்குத் தலைமை வகித்த பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. க. நடராசா பேசுகையில்:-

வியட்நாம் மக்களை போர் நாமும் இன்று மூலவளத்தையும், இயற்கை வளத்தையும் பயன்படுத்தி உணவு உற்பத்தி போராட்டத்தில் ஈடுபட வேண்டிய சூழ்நிலையில் உள்ளோம் என்றார்.

இந்த உணவு அறிமுக விழாவின் இறுதியில் திரு. ஜோ. எட்டன் நன்றி உரை நிகழ்த்தினார்.

இவ்விழாவில் பனம் பொருள்களில் தயாரிக்கப்பட்ட உணவுகள், பழரசங்கள், திடீர் உணவு தயாரிக்கும் மாப்பொருள்கள், கைப்பணிப் பொருள்கள் என்பன காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

(உ-5)

## ஊத்தாம்

என்ன முரளியார், கல்லூர் தொடங்கின தோடை கும்மடை தலைக்கறுப்பையே காண லியில்லை. ஆளைக் கண்டு பிடிக்கிறது பெரிய கஷ்டமாய்ப் போச்சு!

என்ன காலை மாலை எண்டு முருகனிட்டை தவம் கிடந்தனியோ? முந்தின காலத்தில கோயில்வழிய ஆக்கள் நேர்த்தி எண்டும் பூசை எண்டும் தவம் கிடந்தவைதான்.

இப்ப திருவிழாக் காலம் எண்டா பக்தியை மருந்துக்கும் காண முடியவில்லை. எல்லாம் பொழுதுபோக்கும், களியாட்டமும், பெருக்குச் சாமி கும்பிடுறதாகவும் தான் இருக்கு. காலம் கலிகாலம் எல்லே! எல்லாம் தலைகீழாய் போய்க் கொண்டிருக்கிற காலத்தில எப்படி ஆசாரம், அநுபூதி எல்லாம் இருக்கும் எண்டு எதிர்பார்க்கிறது!

நீ கொஞ்சம் பக்தி, ஆசாரமான போக்கு; எனக்குத் தெரியும். 25 நாள் விரதம் அதோடை பிரதட்டை. பிள்ளை நல்லா மெலிஞ்சுபோச்சு.

அது சரி, முருகனிட்டை என்ன வரம் கேட்டாய்? அவனுடைய ஆறுமுகத்தில எந்த முகம் தெரிஞ்சது? மாறுபடு சூரனை வதைத்த முகம்தான் இப்போது தெரியவேணும், மற்ற முகங்களைவிட அதுதான் முக்கியம்.

சூரன்மாரிடம் நாம் படும்பாடு தெரியும் தானே. அவை கோட்டையில இருந்து அடிக்கிற 'ஷெல்' எங்கை விழுந்து யாரை நாசம்செய்யும் எண்டு சொல்ல முடியாது. ஏவுனுக்குள்ளை எப்பவும் உயிர் பயம் தான்

ஆனால் உனக்கு ஒருசெய்தி தெரியுமே? அவை ஷெல் அடிப்பினம் எண்டு நாம் பயப்பிடுறேம் எல்லே. அதே மாதிரி கோட்டைக்குள்ளை இருக்கிறவையும் எங்கடை தம்பிமார் 'ஷெல்' அடிப்பினம் எண்டு பயப்பிடுகினம்!

இதை நான் சொல்லவில்லை. அவையே சொல்லிச்சினமாம். உனக்குத் தெரியுமே இரண்டு மூண்டு வெளிநாட்டுச் செய்தி ஏஜன்சியைச் சேர்ந்த செய்தியாளர்கள் போன கிழமை யாழ்ப்பாணம் கோட்டைக்கு வந்தவை

யாழ்ப்பாணத்தில என்ன நடக்குது, எப்பிடி இருக்குது எண்டு வெளிநாட்டுச் செய்தியாளர் தாராளமாய்ப் பார்க்கலாம் எண்டு அச்சாணியார் சொல்லித்தான் அவை இஞ்சை வந்தவை. அவையும் எல்லாத்தையும் பார்த்து எழுதுவோம் எண்டு வந்தினம்.

முன்னுக்கு, மூண்டு மணித்தியாலம் ரவுணைப் பார்க்கலாம் எண்டு பெரிய சூரன்மார் சொன்னவையாம். பிறகு செய்தியாளர்றை பாதுகாப்புக் கருதி கோட்டைக்கு வெளியேவிட ஏலாது எண்டு சொல்லிப்போட்டினம். பாவங்கள் கோட்டையையும், பலாலி முகாமையும்தான் பார்க்க முடிஞ்சுது.

அவை நிண்ட ரண்டு நாளும் ஷெல் அடி இல்லை. நீ கவனிச்சியோ என்னவோ! அதைப் பகிடியா வெளிநாட்டுச் செய்தியாளர்கட்டை சொன்னபோது, அவர் என்ன சொன்னார் தெரியுமே?

அவை நிண்டபடியால் தாங்கள் (சூரன்மார்) இரண்டுநாள் எங்கடை தம்பிமாற்றை தாக்குதலில இருந்து தப்பினதாகச் சொல்லிச் சந்தோஷப்பட்டினமாம்.

எங்கடை தம்பிமாருக்கு அவை அவ்வளவு பயம்! அதுபோக இன்னொரு அதிகாரி எங்கடை தம்பிமாரிட்டை ... ஆயுதங்கள் கருவியள் இருக்குது எண்டு பட்டியல் போட்டுக் காட்டினாராம்.

எதிரியின் படைபலம் அறிவிறதிலையும் 'மொசாட்' நல்லா உதவுதுபோல

### கொண்டோடி

## பொலிஸாரும் வேலைக்கு போகவில்லை

யாழ்ப்பாணம், செப். 8
யாழ். பொலிஸ்நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸாரிகூட நேற்று யாழ். பொலிஸ் நிலையத்திற்குப் போகவில்லை.

நேற்று முழுவதும் நகரில் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்கள் காரணமாகவே இவர்கள் பொலிஸ் நிலையத்திற்குச் செல்ல முடியாதிருந்தது.

எனினும் யாழ் ஆஸ்பத்திரி பொலிஸ் பகுதியில் இவர்கள் கையெழுத்து வைத்துவிட்டு வீடு திரும்பினர். (உ-10)

## ராஜீவின்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
சேறவுளை அமைச்சரவைக் கூட்டத்தில் திரு. ராஜீவ் காந்தியின் கூற்றில் ஏற்பட்டுள்ள புதிய திருப்பம் குறித்து ஆராயப்படும் என்று தெரிகிறது. (உ-எ)

## ஷெல்குண்டு --

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
தார்.

கொல்லப்பட்ட சிப்பாய் கோப்ரல் அபயசேகரா.

காயமடைந்த சிப்பாய்களுடன் மேற்கண்ட இறந்த இருவரின் சடலங்களும் நேற்று ஹெலிக்கொப்டரில் எடுத்துச் செல்லப்பட்டன.

போராளிகள் தாக்குதல் நடத்தியதால் ஹெலிக்கொப்டர் நீண்ட நேர தாமதத்தின் பின்னர் மண்டைதீவில் இறக்கப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4 மணி அளவில் கோட்டையில் உள்ள சிப்பாய்கள் தவழ்ந்து தவழ்ந்து நூல் நிலையம் மட்டும் வந்தனர்.

புளொட் போராளிகள் இவர்கள்மீது 'எம்8' ரக நவீன ஆயுதம் மூலம் தாக்குதல் நடத்தினர்.

சிப்பாய்கள் கோட்டைக்குள் திரும்பிச் சென்றபின்னர் ஷெல் தாக்குதல்கள் ஆரம்பமாகின

இதனைத் தொடர்ந்தே போராளிகளின் பதிலடியும் தொடங்கியது.

(இ-10)

# முஸ்லிம் லீக் வாலிப முன்னணியை தனி அரசியல் கட்சியாக்க முயற்சி
## கிழக்குப் பிராந்திய சம்மேளன பேராளர் முடிவு

அட்டாளைச்சேனை... செப். 8
அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் கிழக்குப்பிராந்திய சம்மேளனத்தைத் தனி அரசியல் கட்சியாகப் பதிவுசெய்வது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கைத் தலைமை அலுவலகத்தின் அங்கீகாரத்துடன் இதனை நடைமுறைப் படுத்துவது என்று நேற்று முன்தினம் காத்தான்குடியில் நடந்த கிழக்குப் பிராந்திய சம்மேளன பேராளர் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

சிரேஷ்ட உபதலைவரும் மட்டக்களப்பு இரண்டாவது எம். பியுமான ஜனாப் அகமது பிஸ்ஸி சின்னலெப்பை மாநாட்டிற்குத் தலைமை வகித்தார்.

காத்தான்குடி முஸ்லிம் மத்திய மகாவித்தியாலயத்தில் இக்கூட்டம் நடைபெற்றது.

சுமார் 700 பேராளர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

ஏனைய தீர்மானங்கள் வருமாறு:

1. அமைச்சரவையில் கிழக்கு மாகாண முஸ்லிம் எம் பி ஒருவருக்கு இடமளிக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கோருவது.

2. கூட்டுத்தாபனங்கள், அரச திணைக்களங்களில் வேலை செய்யும் முஸ்லிம் ஊழியர்களுக்கு என்று தனியான தொழிற்சங்கம் ஒன்றை நிறுவுவது.

3: கல்முனை, பொத்துவில், சம்மாந்துறை தேர்தல் தொகுதிகளுடன் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் உள்ள முஸ்லிம் பகுதிகளைச் சேர்த்து கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களுக்குத் தனி மாகாண சபை அமைக்கப்பட வேண்டும் என்று கோருவது (உ-எ-14)

## வெலிக்கடை--

(1ம் பக்கத் தொடர்ச்சி)
செயலுக்கோ உட்படுத்தப்படக் கூடாது

★ ஆயுதங்களுடன் பிடிபட்டோர் உடனடியாக வெலிக்கடைக்கு மாற்றப்படவேண்டும்.

★ பூஸாவிற்கு உறவினர்களைப் பார்க்க வருவோர் உணவு, மருந்து உட்பட அத்தியாவசிய பொருள்களை கொண்டு வந்து தர அனுமதிக்கப் படவேண்டும்.

★ திருப்திகரமான முறையில் உணவு வழங்கப்பட வேண்டும். (உ)

## பருத்தித்துறை . .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
கள்.

தட்டாதெருவில் விழுந்து வெடித்த ஷெல் குண்டினால் நடன வகுப்புக்குச் சென்று திரும்பிய எஸ் கமலி (வயது 7), எஸ் ரேவதி (வயது 11) ஆகிய இரு மாணவிகளும் காயமடைந்தனர்.

சகோதரிகளான இவர்கள் இருவரும் புலோலியைச் சேர்ந்தவர்கள்.

பன்னங்கட்டைப் பகுதியில் விழுந்த ஷெல்குண்டினால் சரவெட்டிகள் கொல்லையைச் சேர்ந்த சுந்தர் அழகன் (வயது36) என்பவரும்—

வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த சிறுமி இ. இரிராணியும் (வயது6) காயமடைந்தனர்.

நேற்றுமாலை பருத்தித்துறை கடற்கரையோரமாக விமானம் ஒன்று தாழப்பறந்து நோட்டமிட்டுச் சென்றது.

(உ-118)

## ராஜீவிடம் அவசரமாக அறிக்கை

ஹராரே, செப். 7
அரசு — கூட்டணிப் பேச்சுக்கள் பற்றிய அறிக்கை ஒன்று இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, ஹராரேயில் நிற்கையில் அவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் டிக்ஸித் இதனை அவசரமாக அனுப்பிவைத்தார்.

பிரதமர் பிரேமதாஸ, ஹராரேயில் வைத்து பிரதமர் ராஜீவ் காந்தியுடன் இனப் பிரச்சினை பற்றி பேசவிருக்கிறார் என்பதை அறிந்த பின்னரே, இந்தியத் தூதர் டிக்ஸித் பேச்சு விபரங்களை அனுப்பிவைத்தார்.

(உ-ஐ-எ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15-ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 08-09-1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Numder QJ 60 N86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன் - சஞ்சிவி
### சந்தா விவரம்

உள்நாடு

| காலம் | உதயன் | சஞ்சிவி | உதயனும் சஞ்சிவியும் |
|---|---|---|---|
| | ரூ ச | ரூ ச. | ரூ ச. |
| ஒரு வருடம் | 313-00 | 104 00 | 417 00 |
| 06 மாதம் | 156-50 | 52-00 | 208 50 |
| 03 மாதம் | 78 50 | 26-00 | 104 50 |

அஞ்சல் செலவு உட்பட

| காலம் | ரூ ச | ரூ ச | ரூ ச |
|---|---|---|---|
| ஒரு வருடம் | 469 50 | 156-00 | 625-50 |
| 06 மாதம் | 234-75 | 78-00 | 312-75 |
| 03 மாதம் | 117-50 | 39-00 | 156-50 |

சந்தா விவரங்கள் மாற்றத்திற்குரியவை.

87 AL DAYCLASS
ஆரம்பம் 10 - 09 - 86
புதன் காலை 8 30 மணி
(எமது வழமையான ஆசிரியர் குழுவினால்)
விபரங்கட்கு:-
New Master Institute
B.M C Lane, JAFFNA.

DAY CLASS
பௌதிகவியல் : திரு வரதராஜன்
வர்த்தகம் : திரு. ரட்ணம்
கணக்கியல் : திரு ஹரிதாஸ்
அளவையியல் : திரு S S மனோகரன்
இந்து நாகரிகம்: திருமதி அருள்நங்கை
தமிழ் : திரு. நாகேஸ்வரன்
புவியியல், அரசியல்: பிரபல ஆசிரியர்
ஆரம்பம்: 10-9-86 புதன் 9 மணி
விஞ்ஞானப் பிரிவுகள்:
ஆரம்பம்: 15-9-86 திங்கள் 9 மணி
BECON
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)
156/3 ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க!

★ டென்மார்க்
★ ஜேர்மனி
★ கனடா
குறைந்த கட்டணத்தில்
நம்பிக்கையுடன்
பயணம் செய்ய,
தொடர்பு கொள்வீர்!

யாழ்.-கொழும்பு
விமான சேவை
ஒழுங்காக நடைபெறுகிறது.
முன்கூட்டியே ஆசனங்களைப் பதிவு செய்க

எங்கள் சேவைகள்:
★ எல்லா நாடுகளுக்கும் பிரயாண ஒழுங்குகள்
★ துரிதமான பாஸ்போர்ட், விசா, பொண்ட் ஒழுங்குகள்
★ CONFIRMATIONS, RE-CONFIRMATIONS & CANCELLATIONS
★ இந்தியப் பயணத்தில் விசேட வசதிகள்

ரெலிபோன் - ரெலெக்ஸ்
துரிதமான சேவை
Open 24 Hours

Mack Communications & Travels
இல. 8, முதலாவது ஒழுங்கை, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். Tele:- 24791, 24836

dyn ads